ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிட்.

RELIANCE Asset Reconstruction

11ஆவது தளம், வடக்கு பக்கம், R-டெக் பூங்கா, மேற்கு விரைவு நெடுஞ்சாலை, கோரேகான் (கிழக்கு), மும்பை-400063.

கடனீட்டுச் சொத்துக்களின் E-ஏல விற்பனைக்கான பொது அறிவிப்பு

ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிட்., (RARC) - **"RARC 068 டிரஸ்ட்"-இன் டிரஸ்ட்டி** எனும் முறையில் **இந்தியன் ஓவர்சீஸ் வங்கியுடன்** மேற்கொண்ட **30.03.2022** நாளிட்ட ஒப்படைப்பு ஒப்பந்தத்தின்படி ஒப்பந்ததார நிறுவனமாகவும் கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரருக்கான ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனமாகவும் உள்ளது.

கீழே கையொப்பமிட்டுள்ளவர் கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002-இன் கீழுள்ள உரிமைகளைப் பயன்படுத்தி இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிப்பது யாதெனில், நிலுவைத்தொகையைத் திரும்பப் பெறும் பொருட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்து / சொத்துக்கள் **'இணைய வழி e-ஏல'** முறையில் விற்பனை செய்யப்பட உள்ளது. சொத்து / சொத்துக்கள் கண்டிப்பாக **"உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி", "திரும்பப் பெறப்படமாட்டாது"** எனும் முறையில் மட்டுமே விற்பனை செய்யப்படும். இவை தவிர கீழே விவரிக்கப்பட்டுள்ள இதர நெறிமுறைகளும் பொருந்தும்.

கடன்தாரர் / ஜாமீன்தாரர்கள் பெயர்

1. **தமிழ் ஏஜென்சி,** 20/5, பெருமாள் கோயில் தெரு, குத்தம்பாக்கம் தெற்கு காலனி, குத்தம்பாக்கம் கிராமம், சென்னை - 600124.
2. **N. சிவசங்கரன்,** எண் 20/5, பெருமாள் கோயில் தெரு, குத்தம்பாக்கம் தெற்கு காலனி, குத்தம்பாக்கம் கிராமம், சென்னை - 600124.
3. **T.R. சரவணன்,** எண்: 10/7 4, பஜனை கோயில் தெரு, மடவிளாகம், சென்னை - 600124.

நிலுவைத் தொகை: 08.02.2026 நாள்படி மொத்த நிலுவைத் தொகை **ரூ.42,07,154.19/-** (ரூபாய் நாற்பத்திரண்டு இலட்சத்து ஏழாயிரத்து நூற்று ஐம்பத்து நான்கு மற்றும் பைசா பத்தொன்பது மட்டும்).

அசையாச் சொத்து விவரம்	சுவாதீன நாள் : 21.09.2023 குறைந்தபட்ச விலை ரூபாயில்	டேவணித் தொகை (EMD) ரூபாயில்
திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி தாலுகா, குத்தம்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த சர்வே எண் 419/4A2-இல் அமைந்துள்ள காலி நிலம். பரப்பளவு 1843 சதுர அடி. **எல்லைகள் பின்வருமாறு: வடக்கு:** திரு. K.A. பழனிமுதலியார் அவர்களின் எஞ்சிய மனை, **தெற்கு:** திரு. K. சாமிநாடான் அவர்களின் காலி மனை, **கிழக்கு:** திரு. N. சிவசங்கரன் அவர்களின் வீட்டு மனை, **மேற்கு:** ஊராட்சி சாலை.	ரூ.15,15,000/- (ரூபாய் பதினைந்து இலட்சத்து பதினைந்தாயிரம் மட்டும்)	ரூ.1,51,500/- (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பத்தொராயிரத்து ஐநூறு மட்டும்)

ஏல நிகழ்வு விவரங்கள்:

சொத்து ஆய்வு: 25.02.2026 அன்று முற்பகல் 11.00 மணி முதல் பிற்பகல் 01.00 மணி வரை

ஏலப்புள்ளிகளை சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள்: 26.02.2026

e-ஏல நாள்: 27.02.2026 அன்று நண்பகல் 12.00 மணி முதல் பிற்பகல் 01.00 மணி வரை (தலா 5 நிமிடங்கள் காலநீட்டிப்பாகும் வகையில்)

E-ஏல விற்பனையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

1. குறைந்தபட்ச விலைக்குக் குறைவாகச் சொத்து / சொத்துக்கள் விற்கப்படமாட்டாது. மேலும், ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனம் எனும் முறையில், விற்பனை ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெடின் (RARC) ஒப்புதலுக்கு உட்பட்டது. சொத்து / சொத்துக்கள் கண்டிப்பாக **"உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி", "திரும்பப் பெறப்படமாட்டாது"** எனும் முறையில் மட்டுமே விற்கப்படும்.
2. E-ஏலமானது RARC-இன் ஒப்புதல் பெற்ற சேவை வழங்குநரான **M/s ஆர்கா எனர்ட் பிரைவேட் லிமிடெட்** மூலம் நடைபெறும். இணைய வழி e-ஏலப்புள்ளிப் படிவம் அடங்கிய e-ஏல ஒப்பந்தப்புள்ளி ஆவணம் மற்றும் இணைய வழி e-ஏல விற்பனையின் பொதுவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவை கிடைக்கும் இணையத்தளங்கள்: www.rarcl.com
3. ஏல நடைமுறை குறித்த தொடர்பாடல்கள் மின்னஞ்சல் வழியில் மட்டுமே மேற்கொள்ளப்படும் என்பதால் விருப்பமுள்ள ஏலதாரர்கள் செல்லத்தக்க மின்னஞ்சல் முகவரி வைத்திருப்பதோடு அதையே கலந்து கொள்வதற்கான பயனர் பெயராக வைத்துக் கொண்டு e-ஏல முகமையால் வழங்கப்படும் கடவுச்சொல்லையும் இணைத்துப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.
4. விருப்பமுள்ள ஏலதாரர்கள் தங்கள் ஏலப்புள்ளியை உரிய வடிவத்தில் டேவணித்தொகை (EMD) செலுத்திய விவரங்கள் மற்றும் சொந்தக் கையொப்பமிட்ட வாடிக்கையாளர் விவர (KYC) ஆவணங்களுடன் நிரந்தரக் கணக்கு எண் (PAN) அட்டை, ஆதார் அட்டை போன்றவை) தாக்கல் செய்ய வேண்டும். மேலும் இவற்றைப் பின்வரும் முகவரியிலும் தாக்கல் செய்ய வேண்டும்: அதிகாரப்பூர்வ அலுவலர், ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட் (RARC), **6,ஆவது தளம், கிவ்ஹாஜ் வளாகம் II, எண் 477-482, அண்ணா சாலை, நந்தனம், சென்னை-600035.** மேலும் மின்னஞ்சல் வழியே அனுப்ப வேண்டிய முகவரி: satheesh.p.kumar@relianceada.com, Nevin.pinto@relianceada.com இவ்வாறு ஆவணங்களை அனுப்பிய பின்னர் ஏல நடைமுறையில் கலந்து கொள்வதற்கான பயனர் பெயரும் கடவுச்சொல்லும் அன்னாரின் மின்னஞ்சலுக்கு மட்டும் அனுப்பப்படும். **ஏலப்படிவத்தைத் தாக்கல் செய்வதற்கான கடைசி நாள் 26.02.2026 அன்று வரை.** எக்காரணத்தைக் கொண்டும் ஏலப் படிவமோ டேவணித்தொகையோ காலம் தாழ்ந்து வருவது ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. டேவணித்தொகை இல்லாமல் வரும் ஏலப்புள்ளிகளும் குறைந்தபட்ச விலைக்குக் குறைவாகக் கோரப்படும் ஏலப்புள்ளிகளும் தள்ளுபடி செய்யப்படும். விற்பனை சான்றிதழ் வெற்றிபெற்ற ஏலதாரர் / ஏலதாரர்களுக்கு வழங்கப்படும். மேலும் புதிய ஏலதாரர் / ஏலதாரர்களை சேர்ப்பதோ மாற்றுவதோ ஏற்றுக்கொள்ளப்படாது.
5. இணையக் கோளாறுகள் காரணமாக ஏலதாரர் தரப்பில் ஏற்படக்கூடிய எந்தத் தடங்கலுக்கும் / செயலிழப்புக்கும் RARC-யோ சேவை வழங்குநரோ பொறுப்காக முடியாது. அத்தகைய சூழ்நிலைகளைத் தவிர்க்கத் தடையற்ற மாற்று மின் வழங்கி (alternative power back-up) போன்ற தேவையான எல்லா முன்னேற்பாடுகளையும் ஏலதாரர்கள் செய்து வைத்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.
6. இந்தியன் தியல் ஒழுங்குமுறை 2016, பிரிவு 29A-இன் கீழ் ஏலதாரர்கள் கட்டாய பொறுப்பேற்பு தர வேண்டும்.
7. டேவணித்தொகையை (EMD) RTGS / NEFT முறையில் பணப் பரிமாற்றம் செய்வதற்கான வங்கிக் கணக்கு விவரங்கள் பின்வருமாறு: **நடப்புக் கணக்கு எண்: 040211010000004, வங்கிப் பெயர்: யூனியன் பாங்க் ஆஃப் இந்தியா, கிளை:** மும்பை. பயனாளர் பெயர்: **ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட், IFSC எண்: UBIN0590070. டேவணித்தொகைக்குக் காசோலை / கேட்பு வரைவோலை (D.D) ஏற்கப்பட மாட்டாது என்பதைக் கவனத்தில் கொள்க.**
8. மீதமுள்ள விற்பனைத் தொகையை RTGS / NEFT முறையில் செலுத்தப்படும் **நடப்புக் கணக்கு எண்: 02470200000368, வங்கிப் பெயர்: இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, சாந்தாகுருஸ் (மேற்கு), பயனாளர் பெயர்: RARC 068 டிரஸ்ட், IFSC எண்: IOBA0000247.** டேவணித்தொகைக்குக் காசோலை / கேட்பு வரைவோலை (D.D) ஏற்கப்பட மாட்டாது என்பதைக் கவனத்தில் கொள்க.
9. குறைந்தபட்ச விலைக்குக் குறைவாக மற்றும் / அல்லது டேவணித்தொகை இல்லாமல் கோரப்படும் / வரப்பெறும் ஏலப்புள்ளிகள் ஏற்கப்பட மாட்டா. ஏலதாரர்கள் தங்கள் ஏலத்தொகையை மேற்கொண்டு ஒவ்வொரு சொத்துக்கும் **ரூ.50,000/- (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்)** அல்லது அதன் மடங்குகளில் உயர்த்திக் கோரலாம். தனி ஏலதாரராக இருப்பின் குறைந்தது ஒரு முறையாவது ஏலத்தை கட்டாயம் உயர்த்தி கோர வேண்டும்.
10. வெற்றி பெறும் ஏலதாரர் ஏலத்தொகை / விற்பனை விலையின் 25% தொகையை (ஏற்கனவே செலுத்திய டேவணித்தொகை உட்பட) வெற்றி பெற்ற ஏலதாரராக அறிவிக்கப்பட்ட பிறகு வரும் அடுத்த வேலை நாளிலோ அல்லது அதற்கு முன்னரோ செலுத்த வேண்டும். மீதமுள்ள 75% ஏலத்தொகையை / விற்பனை விலையை வெற்றி பெற்ற ஏலதாரராக அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்களுக்குள் அவர் செலுத்த வேண்டும்.
11. வெற்றி பெறும் ஏலதாரர் மேற்கூறியவாறு விற்பனைத் தொகையினைச் செலுத்தத் தவறினால் எவ்வித அறிவிப்புமின்றி டேவணித்தொகை உட்பட அனைத்துத் தொகைகளும் பறிமுதல் செய்யப்படும். எனினும் மீதத் தொகையான 75% தொகையினைச் செலுத்த அதிகாரப்பூர்வ அலுவலரின் தனிப்பட்ட விருப்புரிமையின் பேரில் நியாயமான அளவுக்குக் காலநீட்டிப்பு பெற வாய்ப்பு உண்டு.
12. வெற்றி பெறாத ஏலதாரர்களின் டேவணித்தொகையானது E-ஏல விற்பனை நடைமுறைகள் முடிந்தவுடன் வட்டியின்றித் திருப்பித் தரப்படும்.
13. அதிகாரப்பூர்வ அலுவலருக்கு உச்சப்சமாகத் தெரிந்த வரையிலும், நம்பிக்கைகள் மற்றும் ஆவணங்களின்படியுமே விவரங்கள் அளிக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஏதேனும் பிழை, முரண்பாடு, விடுபாடு போன்றவை இருப்பின் அதிகாரப்பூர்வ அலுவலர் பொறுப்பாக மாட்டார்.
14. எவ்வித முன்னறிவிப்போ காரணமோ தெரிவிக்காமல் எந்த ஒரு ஏலப்புள்ளியையும் ஏற்க / நிராகரிக்க அல்லது விற்பனையை ஒத்திவைக்க / தள்ளி வைக்க / ரத்துச் செய்ய அல்லது விற்பனையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவற்றில் மாற்றம் செய்யக் கீழே கையொப்பமிட்டுள்ள அதிகாரப்பூர்வ அலுவலருக்கு முழு உரிமையும் விருப்புரிமையும் உண்டு.
15. ஏலப்புள்ளிகளைத் தாக்கல் செய்யும் முன் சொத்தின் / சொத்துக்களின் மீதான கட்டணங்கள் / வில்லங்கங்கள் குறித்தும் சொத்தின் / சொத்துக்களின் உடைமைத்தன்மை, பரப்பளவு, தரம் ஆகியவை பற்றியும் ஏலதாரர்கள் தாங்களே விரும்பியபடி விசாரித்து நிறைவடைந்து கொள்ள வேண்டும். இணைய வழியில் ஏலப்புள்ளிகளைத் தாக்கல் செய்த பிறகு சொத்தின் / சொத்துக்களின் மீதான கட்டணங்கள், வில்லங்கங்கள் மற்றும் வேறெது தொடர்பாகவும் எவ்வகையான உரிமைகோரலுக்கும் இடமில்லை.
16. சொத்து / சொத்துக்கள் விற்பனை தொடர்பான முத்திரைத் தீர்வை / பதிவுக் கட்டணங்கள் உட்பட சட்டப்படியான அல்லது பிற வகைகளிலான நிலுவைகள், பாக்கிகள், வரிகள், கட்டணங்கள் எதுவாக இருந்தாலும் வாங்குபவரையே சாரும்.
17. மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்க: **திரு. சதீஷ் குமார் P, இணை துணைத் தலைவர் - சட்டம், கைப்பேசி எண்: 8939677550, திரு. நெவ்லின் பின்டோ J, உதவி மேலாளர் - கைப்பேசி எண்: 9004962963** ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிட்.-இன் அலுவலர்கள் - மேற்கூறிய முகவரி.
18. மொத்த விற்பனை விலையும் பெறப்பட்டு விற்பனையானது ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்தால் உறுதி செய்யப்பட்ட பின்னரே விற்பனைச் சான்றிதழ் வழங்கப்படும். விற்பனைச் சான்றிதழானது வெற்றி பெறும் ஏலதாரரின் பெயரிலேயே வழங்கப்படும். ஏலப்புள்ளி தாக்கல் செய்தவர் / ஏ-ஏலத்தில் கலந்து கொண்டவர் பெயரில் அல்லாமல் வேறு பெயரில் விற்பனைச் சான்றிதழை வழங்கக் கோருவது ஏற்கப்படமாட்டாது.

இந்த அறிவிப்பு சர்ஃபாசி சட்டம் மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட் விதிகளின் கீழ் கடன்தாரருக்கான / ஜாமீன்தாரர்களுக்கான / அடமானதாரருக்கான சட்டப்படியான 15 நாள் அறிவிப்பாகவும் வழங்கப்படுகிறது..

இடம்: திருவள்ளூர்
நாள்: 14.02.2026

ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர்
ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிட். சார்பில்

பேங்க் ஆஃப் பரோடா

பிராந்திய அலுவலக ஒடுக்கப்பட்ட சொத்து மீட்பு கிளை (ROSARB)
சென்னை ரூரல் ரீஜியன், எண்.123, மெஸ்ஸனைன் தளம், துகார் டவர்ஸ், RL சாலை, எழும்பூர், சென்னை-600 008.

Phone: 044-28885428, E-mail: sarcmt@bankofbaroda.bank.in; Web: www.bankofbaroda.bank.in

அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை IV - A யின்படி (விதி 6 (2) மற்றும் 8 (6) யை பார்க்கவும்)
2002-ம்ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் விதிகளின் கீழ் 8(6) & 6(2) இன் கீழ் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை விற்பனை செய்தல்

கடன்தாரர்/ ஜாமீன்தாரர்/ அடமானதாரர் மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை பாங்க் ஆஃப் பரோடா வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் **"எங்கு உள்ளதோ அப்படியே" "எப்படி உள்ளதோ அப்படியே"** மற்றும் **"என்ன இருக்கிறதோ அதே நிலையில்"** என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்ப உள்ளது. கடன்தாரர்/ ஜாமீன்தாரர்/ அடமானதாரர் விவரம், நிலுவைத் தொகை, சொத்து விவரம், குறைந்த பட்ச கேட்பு விலை, மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம், டேவணித் தொகை மற்றும் ஏல அதிகரிப்பு தொகை ஆகியவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

வ.எண்.1: கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்களின் பெயர் மற்றும் முகவரி :
கடன்தாரர்: திருமதி. அஸ்மத் பானு. I, க/பெ. திரு. A. இப்ராஹிம், C/o AJE Mutton & Chicken Stall, எண்.143, லேக் வியூ தெரு, காந்தி நகர், ஆதம்பாக்கம், சென்னை - 600 088

மொத்த நிலுவைத் தொகை: 08.02.2026 அன்றுள்ளபடி ரூ. 54,43,980.05 மேலும் 09.02.2026 அன்று முதல் செலுத்த வேண்டிய வட்டி பிற கட்டணங்கள் மற்றும் சட்ட செலவினங்கள். | சுவாதீனம் நிலை : மெய்நிலை (Physical)

வங்கிக்கு தெரிந்தவரை வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின் அதனுடன் அசையா சொத்தின் விரிவான விவரங்கள்:
தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் தாம்பரம் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் வட்டம், தாம்பரம் நகராட்சி எல்லைகளுக்குட்பட்ட பழைய எண்.137, புதிய எண்.31, இரும்புலியூர் கிராமத்தின் கிராமநத்தம் சர்வே எண்.176/1பகுதி, நகர சர்வே நில எண்.6, வார்டு எண்.F, பிளாக் எண்.8 இல் அடங்கிய அசோக் நகர், தெற்குத் தெரு, மனை எண்.348 இல் அமைந்துள்ள உரிமையாளரின் பாகம் 2614சதுர அடி. (கட்டுமானதாரரின் பாகம்) 1340சதுர அடியில் பிரிக்கப்படாத பங்கு 320சதுர அடி நிலம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, எல்லைகள்: வடக்கில்: மனை எண்.347, தெற்கில்: காலி நிலம், கிழக்கில்: காலி நிலம், மேற்கில்: சாலை, நாற்பரப்புகள்: வடக்கில்: 60'3", தெற்கில்: 60' 3", கிழக்கில்: 46'0" மற்றும் மேற்கில்: 46' 0", அதனுடன் அதில் (பொதுப்பரப்புகள் உட்பட) கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் இரண்டாம் தளத்தில் 860சதுர அடி சூப்பர் கட்டிடப்பரப்பு கொண்ட ஃப்ளாட் எண்.S-1.

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 29,10,000/- | டேவணித் தொகை ₹ 2,91,000/- | ஏல உயர்வு தொகை ₹ 10,000/-

சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம் : 25.02.2026, பிற்பகல் 3 மணி முதல் மாலை 5 மணி வரை

மின் ஏல தேதி & நேரம் வ.எண்.1: **05.03.2026** நேரம்: மதியம் 2 மணி முதல் மாலை 6 மணி வரை வரம்பற்ற 10 நிமிட அவகாசத்துடன் மின் ஏலம் நடைபெறும்

வ.எண்.2: கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்களின் பெயர் மற்றும் முகவரி :
கடன்தாரர்: திரு. J. லிவிங்ஸ்டன் ஜான் ஜேக்கப், த/பெ. திரு. தாஸ், **திருமதி. ஸ்டெஃபி J ஜெர்லின்,** க/பெ. திரு. J. லிவிங்ஸ்டன் ஜான் ஜேக்கப், **இருவரின் முகவரி:** 1) எண்.182, அழகிரி தெரு, மெஜஸ்டிக் தெரு, வளசரவாக்கம், ஆழ்வார்திருநகர், சென்னை -600087. 2) எண்.15/1, முதல் தளம், VOC தெரு,ரேவு தெரு, கைகாரங்குப்பம், வளசரவாக்கம், சென்னை - 600087. 3) **திருமதி. ஸ்டெஃபி J ஜெர்லின்,** த/பெ. திரு. ஜஸ்டஸ், எண்.5/1, கலைஞர் கருணாநிதி தெரு, விநாயகபுரம், அம்பத்தூர், தமிழ்நாடு - 600053

மொத்த நிலுவைத் தொகை: 08.02.2026 அன்றுள்ளபடி ரூ. 38,40,474.68 மேலும் 09.02.2026 அன்று முதல் செலுத்த வேண்டிய வட்டி பிற கட்டணங்கள் மற்றும் சட்ட செலவினங்கள். | சுவாதீனம் நிலை : மெய்நிலை (Physical)

வங்கிக்கு தெரிந்தவரை வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின் அதனுடன் அசையா சொத்தின் விரிவான விவரங்கள்:
காஞ்சிபுரம் பதிவு மாவட்டம் மற்றும் திருவள்ளூர் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், எண்.89, பெருமாள்பட்டு கிராமத்தின் சர்வே எண்.286/4, 286/6பகுதி, 287/3, 287/4பகுதி, 290/1 பகுதி இல் அடங்கிய 17.07.2018 தேதியிட்ட D.T.C.P. எண்.5200/2018 TVAM2 ஊராட்சி அங்கீகார எண் 3/2006 இன்படி ஸ்ரீ ராம் நகர் அனெக்ஸ் என்ற பெயரில் உருவாக்கப்பட்ட மனைப்பிரிவில் அமைந்துள்ள 222சதுர அடியில் மனை எண்.1 மத்திய பாகத்தின் பரப்பளவு 740சதுர அடி விஸ்தீரணங்கொண்ட நிலம் மற்றும் கட்டிடம், அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி. எல்லைகள்: வடக்கில் - மனை எண்.1 வடக்கு பாகம்; தெற்கில் - மனை எண்.1 தெற்கு பாகம்; கிழக்கில் - மனை எண்.2; மேற்கில் – 24அடி சாலை; நாற்பரப்புகள்: வட புறம் -37அடி; தென் புறம் - 37 அடி; கிழக்கு புறம் - 20 அடி; மேற்கு புறம் - 20 அடி; மொத்தம் 740சதுர அடி விஸ்தீரணம்.

குறிப்பு: 20.08.2025 தேதியிட்ட மதிப்பீட்டு அறிவிக்கையின் படி 524 சதுர அடி அளவில் கட்டிமுடிக்கப்படாத கட்டிடம்.

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 16,00,000/- | டேவணித் தொகை ₹ 1,60,000/- | ஏல உயர்வு தொகை ₹ 10,000/-

சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம் : 25.02.2026, பிற்பகல் 3 மணி முதல் மாலை 5 மணி வரை

மின் ஏல தேதி & நேரம் வ.எண்.2: **18.03.2026** நேரம்: மதியம் 2 மணி முதல் மாலை 6 மணி வரை வரம்பற்ற 10 நிமிட அவகாசத்துடன் மின் ஏலம் நடைபெறும்

மேலும் விற்பனைக்கான விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணையதளமான https://www.bankofbaroda.bank.in/e-auction.htm & ஆன்லைன் விற்பனைக்கான https://baanknet.com. இணையதள இணைப்பை பார்வையிடலாம், மேலும் விருப்பமுள்ள ஏலதாரர்கள் அதிகாரப்பூர்வ அதிகாரியை தொலைபேசி: 044-28885428, கைப்பேசி எண். 9987478064 தொடர்பு கொள்ளவும்.

தேதி : 12.02.2026,
இடம்: சென்னை

அதிகாரப்பூர்வ அதிகாரி,
பேங்க் ஆஃப் பரோடா

ஞாயிற்றுக்கிழமைதோறும்
தினமணி கதிர்
இளமை! புதுமை! இனிமை!

தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிமிடெட்

(பதிவு அலுவலகம் 57, V.E.ரோடு, தூத்துக்குடி)
சென்னை அமைந்தகரை கிளை
எண்.6/44, லஷ்மி டாக்கீஸ் சாலை, ஷெனாய் நகர், அமைந்தகரை, சென்னை - 600 030.

விற்பனை அறிவிப்பு

அசையா சொத்துக்களை விற்பனை செய்வதற்கான விற்பனை அறிவிப்பு

செக்யூரிட்டைசேஷன் அண்ட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் ஆஃப் ஃபைனான்சியல் அஸெட்ஸ் அண்ட் என்ஃபோர்ஸ்மெண்ட் ஆஃப் செக்யூரிட்டி இன்ட்ரஸ்ட் ஆக்ட் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 விதிகள் 8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்துகான ஏல விற்பனை அறிவிப்பு.

இதன் மூலம் குறிப்பாக கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்கள் மற்றும் பொதுவாக பொது மக்களுக்கும் அறிவிப்பது என்னவென்றால் ஈட்டு கடன் அளித்தவரான தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிமிடெட், அமைந்தகரை கிளை வசம் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே குறிப்பிட்டுள்ள அசையா சொத்தினை அங்கீகாரம் பெற்ற அதிகாரி ஆக்கப்பூர்வ சுவாதீனம் எடுத்து அவற்றை **"எங்கு எப்படி உள்ளதோ" "உள்ளது உள்ளபடி" "அங்கு அப்படி அதே நிலையில்"** என்ற அடிப்படையில் **08.02.2026** அன்று வரை உள்ள கடன் பாக்கி தொகையான **ரூ.23,35,371.73 (ரூபாய் இருபத்து மூன்று லட்சத்து முப்பத்து ஐந்தாயிரத்து முன்றாற்று எழுபத்து ஒன்று மற்றும் பைசா எழுபத்து மூன்று மட்டும்) (CC - ரூ.13,02,827.93 மற்றும் HL - ரூ.10,32,543.80) திரு.M.ஜெகன்,** த/பெ.M.S.மணி, **உரிமையாளர் M/s.பேஷன் வேல் (கடன்தாரர்) மற்றும் திருமதி.J.தங்கம்,** க/பெ. M.ஜெகன் ஆகியோர்களிடமிருந்து வசூலிப்பதற்காக **11.03.2026** அன்று ஏலம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. **ஏல நிர்ணயத்தொகை ரூ.24,60,000/-(ரூபாய் இருபத்து நான்கு லட்சத்து அறுபதாயிரம் மட்டும்) மற்றும் முன்வைப்பு தொகை: ரூ.2,46,000/- (ரூபாய் இரண்டு இலட்சத்து நாற்பத்து ஆறாயிரம் மட்டும்).**

அசையா சொத்தின் விபரம்: திரு.M.ஜெகன் அவர்கள் பெயரில் உள்ள திருமுடிவாக்கம் கிராமம், சென்னை - 600 044 என்ற முகவரியில் சர்வே எண்கள். 258/2 (பகுதி), 511/2A2 (பகுதி), 512/2 (பகுதி), 506 (பகுதி), 512/1, 511/2B2, 511/3B, 511/1(பகுதி), 511/2B1, 511/3A, 511/2A1 (பகுதி), 258/2(பகுதி), 262/2B2(பகுதி), 510, 512/3, 258/2 (பகுதி), 507, 259/2 (பகுதி), 262/2B2 (பகுதி) -ன்படி மொத்தமுள்ள 60.46 சென்ட் நிலத்தில் 207 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலத்துடன் ராயல் கேசில் அப்பார்ட்மெண்ட் -ல் 3வது தளத்தில் 615 சதுர அடி பிளிட் ஏரியா கொண்ட குடியிருப்பு ப்ளாட் எண்.I-306. எல்லைகள் : வடக்கில் : பாதை வழி மற்றும் பிளாக் எண்.J, தெற்கில் : பாதை வழி மற்றும் பிளாக் எண்.H, கிழக்கில் : காலி நிலம், மேற்கில் : பாதை வழி மற்றும் பிளாக் எண்.G.

முன் வைப்பு தொகை சமர்ப்பிக்க மற்றும் ஏலம் நடைபெறும் இடம்	தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிட், சென்னை - அமைந்தகரை கிளை, கதவு எண்.6/44, லஷ்மி டாக்கீஸ் சாலை, ஷெனாய் நகர், அமைந்தகரை, சென்னை - 600 030.
ஏலம் நடைபெறும் தேதி & நேரம்	11.03.2026 அன்று பிற்பகல் 1.00 மணி
ஏல நிர்ணயத்தொகை	ரூ.24,60,000/- (ரூபாய் இருபத்து நான்கு லட்சத்து அறுபதாயிரம் மட்டும்)

விற்பனை பற்றிய விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கடன் அளித்தவரின் இணையதளமான www.tmb.bank.in -ல் பார்வையிடவும்.

அங்கீகாரம் பெற்ற அதிகாரி
தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிட்.,
(அமைந்தகரை கிளைக்காக)
கைபேசி : 98421 41304 / 99766 34444

இடம் : சென்னை
தேதி : 09.02.2026

ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா

RACPC செங்கல்பட்டு கிளை (64143)

ஜெயா 17, அழகேசன் தெரு, செங்கல்பட்டு - 603 001. மின்னஞ்சல் : sbi.64143@sbi.co.in

மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

வங்கிக்கு கடன் பொறுப்பு ஏற்படுத்தப்பட்ட அசையா சொத்துக்கள், பிணைக்காப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு அமலாக்கம் சட்டம் 2002 - ன் கீழ் விற்பனை

கடன்தாரர்:	சொத்து முகவரி:
திரு.கார்த்திக் பாலு, எண்.343, மனை எண்.49, 3வது குறுக்குத் தெரு, எம். ஜி.நகர், பகுதி III, ஆதனூர், ஊரப்பாக்கம், செங்கல்பட்டு-603 202.	ஃபிளாட் எண். S2 இரண்டாவது தளம், எமரால்டு பிளாட்ஸ், மனை எண்.9. எம்.ஜி.நகர் பகுதி IV, ஆதனூர், ஊரப்பாக்கம், செங்கல்பட்டு-603 202. **அலுவலக முகவரி:** சமஸ் இஞ்சினியரிங் கார்ப்பரேஷன், எண்.81, 1வது பிரதான சாலை, CIT நகர், சென்னை-600 035.

இதன் கீழ்க்கையொப்பமிட்ட நபர், ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா - வின் அதிகாரப்பூர்வ அலுவலராக, பின் வரும் சொத்து/க்களை சர்ஃபாசி சட்டம் பிரிவு 13(4) ன் கீழ் அடையாள சுவாதீனம் எடுத்துள்ளார்.

பொது மக்களுக்கு இதன் மூலம் தெரிவிக்கப்படுவது யாதெனில், இதன் கீழ்க்குறிப்பிட்டுள்ள விவகாரங்களில், வங்கியின் நிலுவைகளை வசூலிக்கும் பொருட்டு, சர்ஃபாசி சட்டம் 2002 ன் கீழ் **''இருக்கின்ற இடத்தில்'' மற்றும் ''இருக்கின்ற நிலையில்''** என்ற அடிப்படையிலும், இதன் கீழ்க்குறிப்பிட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையிலும், இதில் குறிப்பிடப்பட்டுள்ள கடன் பொறுப்புக்கு கட்டுப்பட்ட சொத்து/க்களுக்கு மின்னணு ஏலம் நடத்தப்படும்.

அசையா சொத்துக்களின் விரிவான விபரங்களாவன

அனைத்து இன்றியமையாத பகுதிகளும் பாகங்களும் கொண்ட 282 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலம். அமையப்பெற்ற சர்வே எண். 339/4 மற்றும் மனை எண் .9 ஃபிளாட் எண் .